சுற்று நிருபம் **16/2009**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்
30.12.2009

வட மாகாணத்திலுள்ள சகல
கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்களுக்கும்

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவுடன் கடித கொடுக்கல் வாங்கல்

கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் மேன் முறையீடுகள், முறையீடுகள் சலுகைகள் கோரி கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிடம் அனுப்பி வைக்கும் கடிதங்கள் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு ஒழுங்கு விதி 6:4 உப விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றாதிருப்பதனை ஆணைக்குழு அவதானித்துள்ளது.

ஆகவே கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களை கட்டாயமாக கடைப்பிடிக்குமாறு சகல மட்டத்திலான கூட்டுறவுச் சங்க/ சங்கங்களின் எல்லா ஊழியர்களையும் அறிவுறுத்துவதென ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கம் அல்லது அதன் ஊழியர் ஒருவரால் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படும் கடிதங்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவர் அல்லது உத்தியோகத்தர்களின் சொந்தப் பெயர்களிற்கு அனுப்புதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

கடமையில் இருக்கும் கூட்டுறவு ஊழியர்களால் ஆணைக்குழுவிற்கு அனுப்பும் கடிதங்கள் யாவும் சங்கம் ஊடாகவே அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

கடமையில் இருக்கும் ஒரு ஊழியரால் ஆணைக்குழுவிடம் அனுப்பி வைப்பதெற்கென சங்கத்திடம் ஒப்படைக்கும் கடிதங்கள் பாரம் கொடுத்து ஒரு வார காலத்தில் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக சங்கத்தால் தயாரிக்கப்பட்ட பூரண அறிக்கை ஒன்று அல்லது குறிப்புக்கள் அக்கடிதத்துடன் இணைக்கப்பட்டு ஆணைக்குழுவின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

சங்கத்தால் தயாரிக்கப்படும் அறிக்கையில் ஊழியரின் மேன்முறையீட்டில் குறிப்பிடப்பட்ட எல்லா விடயங்களும் உள்ளடக்கப்படல் வேண்டும். அதே போன்று அனுப்பி வைக்கப்படும் அறிக்கை பிழையற்ற தரவுகள் மற்றும் விபரங்கள் உள்ளடங்கலாக பூரணமான அறிக்கையாக இருத்தல் வேண்டும்.

ஊழியர் ஒருவரால் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்கென சங்கத்தில் ஒப்படைக்கப்படும் முறையீடு அல்லது வேறு அதிருப்தி காரணம் தொடர்பாக செய்யப்படும் முறையீடு சாதாரண அறிவித்தலின்றி ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்காமல் சங்கம் இருத்தல் ஆகாது. ஆனாலும் சங்கத்தின் உள்விவகாரங்கள் பற்றிய முறையீடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க முன்பு அதை சங்கத்தால் தீர்த்துக் கொள்ள முடியுமா என்பதை கருத்தில் கொண்டு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். எப்படியாயினும் ஊழியரின் முறையீடு சம்பந்தமாக ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்காவிடின் அதற்கு ஏற்புடைய காரணங்கள் முறையீட்டாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். அதைப்பற்றி ஆணைக்குழுவிடமும் அறிவித்தல் வேண்டும். இதுபற்றி எல்லா ஊழியர்களின் கவனத்திற்கும் கொண்டு வந்து அதற்கு ஏற்றவாறு செயற்படவும்.

தொடர்பாடல்களின்போதுஇச்சுற்றுநிருப ஏற்பாடுகள் 01.01.2010ம் திகதிமுதல் கடைப்பிடிக்கப்படுவது கண்டிப்பாக கவனத்தில் கொள்ளப்படும்.

30.12.2009ம் திகதிய ஆணைக்குழு கட்டளைப்படி.

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடமாகாணம்

P. VAGESHAN
Secretary
Co-operative Employees Commission
Northern Province

பிரதி:

1. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும், வ.மா
2. வடமாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்